Arimaa Nokku

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

13:2 ஜூலை 2019

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
13 : 2 சூலை 2019

மனானா
- வ. ஜெயதேவன் 03

An Evaluation of the Translational Equivalence: A Theoretical Approach
- P. Manimaran 05

சிலம்பு-மிருச்சகடிகம்: ஓர் அக நோக்கு
- மு. அருணாசலம் 10

அணங்கு மீதான பாலியல் அரசியல்
- செ. சாரதாம்பாள் 24

சங்க கால மக்களின் ஊரக வாழ்வும் நகரிய வாழ்வும்
- கி. துர்காதேவி 32

குறள் தடத்தில் நீதிநெறி விளக்கம்
- பழ. முத்துவீரப்பன் 41

வாழ்வியல் தடமாற்றமும் வள்ளுவரின் தடுமாற்றமும்
- சு. மாதவன் 48

Perception of Academic Environment in Research and Higher Education
- S. Indradevi 51

அருளிச்செயலில் அகத்திணை மரபுகள்
- ம.பெ. சீனிவாசன் 55

Effect of Visual Schedule in Personal Narratives in Children with Visual Hypersensitivity– A Clinical Study
- Krupa Venkatraman & V. Thiruvalluvan 61

## தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

# திக்குத் தெரியாத காட்டில்

இந்தியாவின் இன்றைய பொருளாதார நிலை இடர் தரும் இருளில் இருப்பதாகப் பொருளாதார வல்லுநர்கள் கருத்துரைக்கின்றனர். வளர்ச்சி, சாதனை, முன்னேற்றம் என்னும் கவர்ச்சி வார்த்தைகளால் கட்டப் பட்ட வருணனை மாளிகை நம் கண்முன் சரிந்து விழுவதைக் கண்டுகொண்டிருக்கிறோம்.

இங்கிலாந்தில் டெர்பி என்னும் குதிரைப் பந்தயப் புகழ் படைத்த இடத்திற்கு நம்பிக்கையோடு மது விற்கச் சென்ற சகோதரர்கள் இருவர் பற்றிய கதை நம் நினைவுக்கு வருகிறது. அண்ணன் தம்பி இருவரும் ஒரு பீப்பாயில் மதுவை நிரப்பிக்கொண்டு புறப்படும்முன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். போகிற்வழியில் மது அருந்த வேண்டும் என்னும் விருப்பம் தலைதூக்கலாம் அப்படித் தலைதூக் கினால் ஒரு சில்லிங் பணம் செலுத்தித்தான் அதற்குரிய அளவு குடித்துக்கொள்ளவேண்டும். நம்முடையதுதானே விற்பனைப்பொருள் என்று சும்மா குடித்துக்கொள்ளக் கருதக்கூடாது. இதுதான் ஒப்பந்தம். கொஞ்சம் தொலைவைக் கடந்ததும் தம்பிக்குக் குடிக்கும் ஆசை வந்துவிட்டது. தான் வைத்திருந்த ஒரு சில்லிங்கைக் கொடுத்து மது அருந்தினான். தம்பி குடித்து அதிக நேரமாகவில்லை; அண்ணனுக்கு வேட்கை வந்துவிட்டது. தம்பி கொடுத்திருந்த ஒரு சில்லிங்கை அவனிடம் கொடுத்து அதற்குரிய அளவு மது பருகினான். வழிநெடுக இப்படி மாற்றிமாற்றி அந்த ஒரு சில்லிங் பணத்திலேயே ஒரு பீப்பாய் மதுவையும் தீர்த்துவிட்டார்கள். பொருளாதாரப் பாடத்தில் பணச் சுழற்சி வேகத்திற்கு (velocity of circulation) ஏற்பப் பண வருவாய் வேகம் (velocity of income) இருக்கவேண்டும் என்பார்கள்.

ஒரு சில்லிங்கில் மது தீர்ந்து வெறும் பீப்பாய் ஆனதுபோலத்தான் இன்று நம் இந்தியப் பொருளாதார நிலை! ஒன்றும் அற்ற பீப்பாயோடு ரிசர்வு வங்கி வாசலில் நிற்கிறது நாடு. கதையில் வரும் பாத்திரங்கள் யார்? அரசும் பெருநிறுவன முதலாளி களும்தான் என்று சொல்லவேண்டுமா?

நாட்டில், பொருளாதாரச் சுணக்கம் எற்பட்டுத் தொழில் துறைகள் கதவை மூடுமெல்லையை எட்டியுள்ளன. வாகனத் தொழில் துறை யில் தேக்க நிலை; ஆயிரக்கணக்கானோர் வேலைபோகுமே என்று மனம் வேகின்றனர். பல நிறுவனங்கள் கைகளில் அரை முக்கால் புள்ளிகளை வைத்துக்கொண்டு காத்திருக்கின்றன. நுகர்வுப் பொருள்கள் துறையிலும் மந்தநிலை; சேவைவரி விதிப்பின் கடுமையிலிருந்து விடுதலை கிடைக்காவிட்டால் பணியிடங்கள் குறைக்கப்பட்டுப் பலரும் வீட்டுக்கு அனுப்பபடும் சூழல். ஊர்ப்புறச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள

ISSN 2320-4842

விற்பனை வீழ்ச்சியால் அதிவேக விற்பனைப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. வேளாண்மக்கள் தற்கொலைகள் தொடரக் கூடவே நடுத்தர உயர் நடுத்தரத் தொழிலதிபர்கள் தற்கொலைகளும் அதிச்சி அலைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இவ்வீழ்ச்சி நிலைக்குக் காரணம் என்ன? பருவமழை, அரசின் பொருளாதாரக் கொள்கை, வரவுசெலவுத் திட்டத்தின் உட்பொதிவு என்று பொருளாதார வல்லுனர்கள் பலவற்றையும் காட்டு கின்றனர். 2019 ஜூன் வரையிலான பொருளாதார முன்னேற்றங்கள், இந்தியப் பொருளாதாரம் மந்தநிலை நோக்கி நகர்வதையே காட்டுகிறது என்று இன்றைய இந்திய ரிசர்வு வங்கியின் ஆளுநர் சந்திரகாந்த் தாஸ் கருத்துரைத்துள்ளார்.

நாட்டில் பொருளாதாரம் முன்னேறினால் கூடப் பொதுமக்கள் முன்னேறியதாக இந்திய வரலாறு இல்லையே! ◆

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
கா. செல்லப்பன்
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| பெரும்புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/- | US $ 500 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/- | US $ 700 |

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15, 000/- |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10, 000/- |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/- |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/- |

கட்டணம் செலுத்த: